பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 24 வெள்ளிக்கிழமை 09.09.2022 கதிர் 195

## திருக்கோணேஸ்வரம் கோயில் காணியை ஆக்கிரமிக்க முயற்சி

ஈழத்தின் தொன்ம வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரம் ஆலயம் அமைந்துள்ள - ஆலயத்துக்குச் சொந்தமான காணியை உல்லாசத்துறை அபிவிருத்தியின் பெயரால் ஆக்கிரமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

☞ 2

# காங்கேசன்துறையில் இருந்து ஹம்பாந்தோட்டை வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிரான போராட்டம்

## நாளை காலை ஆரம்பம்

கொடூரமான பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் கையெழுத்துத் திரட்டும் பிரச்சார நடவடிக்கையொன்று காங்கேசன்துறை தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரை நாடு முழுவதும் நடத்தப்படுகின்றது.

நாளை ஆரம்பமாகும் இந்நிகழ்வில் திரண்டு பங்களிக்க மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்பாடாளர்களாக இலங்கைத் தமிழரசு கட்சி வாலிபர் முன்னணியின் சார்பில் கி. சேயோன், சர்வஜன நீதிஅமைப்பின் சார்பில் ம.ஆ.சுமந்திரன் எம்.பி., தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுசன அமைப்புக்களின் கூட்டமைப்பு சார்பில் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் இந்த அழைப்பைக் கூட்டாக விடுத்துள்ளனர்.

இதையொட்டி அவர்கள் விடுத்த ஊடக அறிக்க. வருமாறு:-

☞ 2

## அரை மணித்தியாலத்தில் சபை அமர்வு ஒத்திவைப்பு



நாடாளுமன்ற அமர்வு இன்று அரை மணித்தியாலத்தில் நிறுத்தப்பட்டது.

இன்று காலை 09.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன

☞ 2

## மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் தவறி வீழ்ந்து பரிதாபச் சாவு

மரக்கிளைகளைத் தறிப்பதற்காக மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், மாதகலில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

பாக்கியதாசன் ஜோசப்

☞ 2

## இராஜாங்க அமைச்சரவைக்கு எதிராக சஜித் அணி தீர்மானம்

### செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றம்



அதிக எண்ணிக் கையிலான இரா ஜாங்க அமைச்சர வையை ஜனாதிபதி நியமித்தமைக்கு எதி ராக சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக் கிய மக்கள்

☞ 2

## எந்தவொரு அரசியல் சதியாலும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது

### பிரதமர் தினேஷ் திட்டவட்டம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த ஆட்சியை ஒருபோதும் கவிழ்க்க முடியாது. இந்த ஆட்சியில் எந்தவொரு அரசியல் சூழ்ச்சிக்கும் ஒருபோதும் இடமில்லை.

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப்

☞ 2

## போராட்டக்காரர்கள் 'போக்கிரிகள்'

### இப்படிச் சாடினார் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த



போராட்டக்காரர்கள் குடுக்காரர்கள், போக்கிரிகள். அவர்கள் தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

- இவ்வாறு நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுள்ள சனத் நிஷாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், மக்கள் என்னை

☞ 2

## சலுகைகள் வேண்டாம்; சம்பளமும் வேண்டாம்!

### இராஜாங்க அமைச்சர்கள் அதிரடி அறிவிப்பு



நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு சலுகைகள் மற்றும் சம்பளம் தேவையில்லை என்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட இராஜாங்க அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவது தற்போது மிக முக்கியப் பொறுப்பாகும். அதற்காக இராஜாங்க அமைச்சர்கள் என்ற வகையில் அரசின் பொறுப்புக்களை ஏற்று

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## நிதி அமைச்சருடன்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதே தமது எதிர்பார்ப்பு எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் புதிய இராஜாங்க அமைச்சர் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**சாந்த பண்டார**

தற்போதை நிலையில் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே ஜனாதிபதியினதும் பிரதமரினதும் எதிர்பார்ப்பாகும்.

பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. எமக்குக் கிடைத்துள்ள அமைச்சுப் பொறுப்பு என்ன என்பதை விட வழங்கப்பட்டுள்ள பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்பதே பிரதானமானதாகும். நாங்களும் நியாயமாக செயற்பட வேண்டியுள்ளது.

புதிய அமைச்சர்கள் நியமனத்தால் நிறைய செலவுகள் ஏற்படும் என்று யாராவது நினைக்கலாம். அமைச்சருக்குரிய சம்பளத்தை பெற்றுக் கொள்ளாமல் எம்.பி.யின் சம்பளத்தை மட்டும் பெற்றுக்கொண்டு செயற்படுவதாக ஜனாதிபதியிடம் நாம் தெளிவாக கூறியுள்ளோம். ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரம் செயற்பட்டார். அரசமைப்பை மீறும் வகையில் எந்தவொரு செயற்பாட்டையும் அவர் மேற்கொள்ளவில்லை என்பதை விசேடமாக குறிப்பிட வேண்டும்.

வலுவான அமைச்சு இருந்தால் முதலீட்டாளர்களை ஈர்க்கவும் கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டுக்கு அரசியல் ஸ்திரத்தன்மை தேவை. அதற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் எம்.பி குழு அவசியமானது.

இந்த முடிவால் ஐ.எம்.எப். கடன் தொடர்பிலும் சாதகமான நிலை காணப்படுகிறது. ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட இலக்கின்படி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற அதேவேளை ஜனாதிபதிக்கு எமது பாராட்டை தெரிவிக்க வேண்டும் - என்று ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

**சாமர சம்பத் தசநாயக்க**

சலுகைகளை எதிர்பார்க்காமல் நாம் கடந்த காலத்தில் பணியாற்றினோம். மேலும் எமக்கு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சு பொறுப்பை எமக்குக் கிடைத்த அணிகலனாக நாம் கருதவில்லை. சலுகைகள் பெறவும் வாகனங்கள் மற்றும் எரிபொருளுக்குப் பின்னால் ஓடுவதற்காக இந்த அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கவில்லை.

மக்களுக்குச் சேவை செய்யவே அமைச்சைப் பொறுப்பேற்றோம். புதிய பதவியின் மூலம் மக்களுக்கு அதிகபட்ச சேவையை அளிக்க எதிர்பார்த்துள்ளேன் - என்று ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத்தசநாயக்க தெரிவித்துள்ளார்.

**ஜகத் புஸ்பகுமார**

கடந்த காலங்களில் நாடு அரசியல் நெருக்கடியில் இருந்தது. அந்த நிலையில் யாரும் இந்த நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றார். பின்னர் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

நாடாளுமன்றத்தின் ஊடாக அவருக்கு ஆதரவை வழங்கினோம். ஜனாதிபதிக்கு உதவியாக இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் செயற்படும் வாய்ப்பு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரின் கரங்களை வலுப்படுத்த இந்தப் பதவிகளை ஏற்றுக் கொண்டோம்.

நாடாளுமன்றத்தைப் பலப்படுத்த வேண்டும் எனத் தொடர்ச்சியாகக் கூறி வந்தோம். அமைச்சு பொறுப்பு தொடர்பில் எமக்குச் சிக்கல் கிடையாது.

கொடுக்கப்பட்ட பொறுப்பை சரிவரப் பயன்படுத்த வேண்டும். வெளிப்படைத் தன்மையுடன் பணியாற்றுவதுதான் எனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பாகும் - என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

**அருந்திக பெர்னாண்டோ**

பல சுற்றுப் பேச்சுகளின் பின்னர் இராஜாங்க அமைச்சர்கள் பலர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். நிபந்தனையின்றி நாம் அவரை ஜனாதிபதியாக்கினோம்.

இராஜாங்க அமைச்சர்கள் என்ற வகையில், சிறப்பு சலுகைகள் எதனையும் பெறாமல், எம்.பிக்களுக்குரிய சம்பளத்தை மட்டுமே பெற முடிவு எடுத்துள்ளோம்.

நாட்டை வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்து காப்பாற்றும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு நிபந்தனையின்றி ஆதரவளிக்க முடிவு செய்துள்ளோம் - என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

**அசோக பிரியந்த**

தற்போதைய நிலையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு என்ற வகையில், நாட்டின் அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் பிராந்திய அலுவலகங்களையும் ஒன்று திரட்டி, அரசு இயந்திரத்தை பலப்படுத்தி, நாட்டை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்.

சலுகைகளை எதிர்பார்த்து நாம் இந்த முடிவை எடுக்கவில்லை. ஜனாதிபதியும் பிரதமரும் பலம் பெற்றால்தான் நாட்டு மக்களுக்கு சேவை செய்ய முடியும்.

இந்தநிலையில், நாட்டை கட்டியெழுப்புவதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சு தன்னால் இயன்ற பணிகளை மேற்கொள்ளும்-என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

**இந்திக்க அனுருத்த**

நாட்டின் தற்போதைய நிலையில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அந்தப் போராட்டத்தை வெற்றிகொள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது. இந்தப் பதவியுடன் நாம் சம்பளம் அல்லது சலுகைகள் எதுவும் பெறமாட்டோம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை வெல்வதற்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

## இராஜாங்க......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாடுமிகவும் பாரதூரமான முறையில் வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில், வாழ்க்கைச் செலவு அதிகரித்துப்போன நேரத்தில், அரசால் தன்னிச்சையாகவும், நெறிமுறையற்றதுமாக இராஜாங்க அமைச்சர்கள் 37 பேரளவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பெரும் எண்ணிக்கையிலான இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பது இத்தருணத்தில் நாட்டுக்கு ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதோடு, அது மேலும் இந்த நாட்டை அதலபாதாளத்துக்குத் தள்ளும் என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக நம்புகின்றது.

இந்த வீணான நிலைமைக்கு எதிரான மக்களின் எதிர்ப்புப் போலவே குடிமக்கள் போராட்டத்தின் நோக்கங்களை மீறி இந்த மிகப் பெரிய இராஜாங்க அமைச்சரவையை நியமித்ததன் மூலம் அரசு பழைய வழமையான பாதையில் பயணிக்கின்றது என்பதையே மறைமுகமாக உணர்த்துகின்றது.

இதன் பிரகாரம், இந்தப் பாரிய இராஜாங்க அமைச்சரவையை ஜனாதிபதி நியமித்தமைக்கு எதிராக நேற்றுக் கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## எந்தவொரு...........

பிரதமராக்க ஆளும் தரப்புக்குள் சிலர் சூழ்ச்சி செய்கின்றனர் என்று வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் வதந்தி.

ஜனாதிபதியின் விருப்பத்துடனும் ஆளும் கட்சியின் பெரும்பான்மைப் பலத்துடனும் நான் பிரதமர் பதவியை வகிக்கின்றேன். இது நான் தேடிச் சென்று பெற்ற பதவி அல்ல. இந்தப் பதவி என்னைத் தேடியே வந்தது.

பிரதமர் பதவியிலிருந்து என்னை நீக்கத் திரைமறைவில் எந்தச் சூழ்ச்சியும் இல்லை. எவரினதும் அழுத்தமும் எனக்கு வரவும் இல்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஏகோபித்த ஆதரவுடன்தான் நான் பிரதமர் பதவியை வகிக்கின்றேன். நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிக்கும் இன்னமும் முடிவை எடுக்கவில்லை.

அவர் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ளார் எனவும், பிரதமராகப் போகின்றார் எனவும் வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை - என்றார்.

## மரத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இமானுவேல் (வயது - 75) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரத்தில் ஏறி அதன் கிளைகளைத் தறித்தபோது குறித்த நபர் தவறிக் கீழே வீழ்ந்துள்ளார். அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்காக அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டபோதும், அதற்கு முன்னதாகவே அவர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இளவாலைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## திருக்கோணேஸ்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆக்கிரமிப்புத் திட்டத்துக்கு வழமைபோன்று தொல்பொருள் திணைக்களத்தினரும் கிழக்கு மாகாண ஆளுநரும் ஆதரவளிக்கின்றனர் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

இதேசமயம், திருக்கோணேஸ்வரர் ஆலய பகுதியைச் சுற்றுலா அபிவிருத்திக்கு உள்வாங்குவதற்கும் இதற்காக ஆலய காணியைச் சுவீகரிக்கவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எதிர்ப்பு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதற்கு அந்த மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் இரு வருடங்களுக்கும் மேலாக மாவட்டத்துக்கு வருகை தரவில்லை என்பதும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் அவர் பங்கேற்பதில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஆலயத்துக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணிக்குள் உல்லாசத்துறை திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆலய பரிபாலன சபையினருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தமிழரின் தொன்மை நிறைந்த - பாடல் பெற்ற சிறப்புப் பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்து தமிழ் மக்களும், இந்து மக்களும் முன்வரவேண்டும் என்றும் ஆலயத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அரை மணித்தி...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் சபை அமர்வு ஆரம்பமானது.

இந்நிலையில், இன்றைய அமர்வில் 10 இற்கும் குறைவான எம்.பிக்களே வருகை தந்ததன் காரணமாக நாடாளுமன்றம் செப்டெம்பர் 20ஆம் திகதி மு.ப. 9.30 வரை ஒத்திவைக்கப்பட்டது.

## போராட்டக்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொண்டுள்ளனர். அதனால்தான் மூன்று தடவைகள் மாவட்டத்தில் முதலிடம் பிடித்தேன். ஜனாதிபதி பதவி விலகினாலும், நாம் இன்னும் மக்களால் நிராகரிக்கப்படவில்லை - என்றார்.

அதேவேளை, கஞ்சாவைச் சட்டபூர்வமாக்கி, அதன் மூலம் அந்நியச் செலாவணியைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றுலாத்துறை சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

## காங்கேசன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1979 ஆம் ஆண்டு, 6 மாதங்களுக்கு ஒரு தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாக கொண்டுவரப்பட்டு, 40 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்தும் அமுலிலுள்ள கொடூரமான பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் கையெழுத்துத் திரட்டும் பிரச்சார நடவடிக்கையொன்றினை நாம் ஆரம்பித்துள்ளோம்.

அன்றைய அரசாங்கத்திற்கு எதிரான அதிருப்தியை நசுக்குவதற்கு இச்சட்டம் பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டோம்.

இது கடந்த காலங்களில் தொடர்ந்ததைப் போலவே இன்றும் தொடர்கின்றது. குறிப்பாக தற்போது காலி முகத்திடல் அகிம்சை வழிப் போராட்டக்காரர்களை கைதுசெய்யவும் இச்சட்டமே பயன்படுத்தப்படுகின்றது.

நாளை (10.09.2022) காலை 9.00 மணிக்கு மாவிட்டபுரம், கந்தசாமி கோயிலிலிருந்து இது ஆரம்பமாகும். காங்கேசன்துறை தொடக்கம் ஹம்பாந்தோட்டை வரையாக நடைபெறவுள்ள இந்த நாடு தழுவிய ஊர்தி வழிப் போராட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக்கோரி வலியுறுத்துவதாகும்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவாக எங்களுடன் சேர்ந்து, இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினை இரத்து செய்வதற்கான மனுவில் கையெழுத்திடுங்கள். - என்று உள்ளது.

076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இழுக்கும் அவமானமும்தான் மிச்சம்

தங்களின் எதிர்காலம் வளமாக அமைய வேண்டும் என்று எதிர்பார்த்து, 2019 இல் ராஜபக்ஷக்கள் அணிக்கு இலங்கை நாட்டின் 69 லட்சம் வாக்காளர்கள் ஒன்று திரண்டு வாக்களித்தனர்.

அடுத்த வருடம் பொதுத்தேர்தலில் அந்தத் தரப்புக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்தனர் அதே மக்கள்.

இன்று அவர்களுக்கு என்ன மிஞ்சி இருக்கின்றது? என்ன கிடைத்திருக்கின்றது?

வறுமையும் வெறுமையும் சூனியமும்தான் அவர்களுக்கு மிஞ்சி கிடக்கின்றன. நாட்டைச் சூறையாடிய அரசியல்வாதிகள் முழு நாட்டையும் வாங்குரோத்து நிலைக்குள் தள்ளிவிட்டனர். சரித்திரத்தில் முதல் தடவையாக கடனிறுக்க முடியாத நாடு என்று இலங்கை பட்டியலிடப்பட்டு ஐந்து மாதங்களாகிவிட்டன. இன்னமும் அதிலிருந்து நாம் மீளவில்லை. இனியும் மீளுவோமோ தெரியவில்லை.

நாட்டின் 63 லட்சம் மக்கள் உணவுப் பாதுகாப்பு இல்லாத பட்டினி அவலத்தை எதிர்நோக்கி இருக்கின்றனர் என உலக உணவுத் திட்டம், ஐ.நாவின் உணவு விவசாய நிறுவனம் ஆகியன எச்சரித்துள்ளன.

போஷாக்கின்மையால் சிறுவர்கள் பாதிக்கப்படும் பேராபத்து ஏற்பட்டிருப்பதாக யுனிசெவ் எச்சரிக்க, இல்லை, இல்லை அப்படியான ஆபத்து நிலைமை ஏற்பட்டு விடவில்லை என்று அரச சுகாதார அதிகாரிகள் சமாளிக்க முற்படுகின்றனர்.

பணவீக்கம் 90 வீதத்துக்கு எகிறி இருக்கின்றது. போஷாக்கு உணவுகளின் விலை அதிகரிப்பு 156 வீதத்தை எட்டி இருக்கின்றது. உலகில் எங்கும் இல்லாத விலை அதிகரிப்பு. மறுபுறத்தில் சாமானியனின் சம்பளம் ஒரு ரூபா கூட அதிகரிக்கவில்லை. இந்தச் சூழலில், போஷாக்கு உணவு வகைகளின் விலைகள் கண்மண் தெரியாமல் அதிகரித்திருக்கையில் பட்டினியும் போஷாக்கின்மையும் தன்பாட்டில் வருவது தவிர்க்க முடியாதது.

ஐ.நா. முகவர் அமைப்புகள் இங்கு உணவு நிலைமை, போஷாக்கின்மை, பட்டினி அவலம் குறித்துத் தெரிவிக்கும் எச்சரிக்கைகளைச் சமாளிப்பதற்காக, அந்த விடயங்களை ஒட்டி புள்ளி விவர சவால்களை முன்வைக்கின்றது இலங்கையின் சுகாதார அமைச்சு.

கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு? இங்குள்ள அவல நிலையை உறுதிப்படுத்துவதற்கு ஐ.நா. முகவர் அமைப்புகள் தேவையில்லை. மக்களே நேரடியாகப் பார்க்கின்றனர். அனுபவிக்கின்றனர். புள்ளி விவரங்களைக் காட்டிச் சமாளித்து, அரசியல் தலைமைத் துவங்களுக்கு காவடி தூக்கும் வேலையை அதிகாரிகள் இனியாவது கைவிட வேண்டும்.

போஷாகின்மையும் பட்டினி அவலமும் அப்படி ஒன்றும் மோசமான கட்டத்தில் இல்லை என்று சமாளிக்க முற்படுவதன் மூலம் சுகாதார அதிகாரிகள் எதை நிலைநாட்ட விழைகிறார்கள்?

எங்கள் மக்களின் – சிறாரின் – ஏழைகளின் – அவல நிலையை ஐ.நா. முகவர் அமைப்புக்கள் சர்வதேச ரீதியாக அம்பலப்படுத்துவது நாட்டுக்கு இழுக்குத்தான். அவமானம்தான்.

ஆனால் அவற்றையெல்லாம் – அவமானத்தையும் இழுக்கையும் – எதிர்கொள்ளாமல் பெருமையையும் சிறப்பையும் தக்க வைத்துக் கொள்ளும் நிலையில் இருந்த நாட்டை நம் அரசியல்வாதிகள் குட்டிச்சுவராக்கி விட்ட பின்னர், அவற்றை நாம் மனச் சஞ்சலத்துடன் எதிர் கொண்டேயாக வேண்டும். அதுதான் யதார்த்தப் புறச் சூழல் நமக்கு விட்டுள்ள ஒரே மார்க்கம்.

# இராஜாங்க அமைச்சுகளை பதவியேற்ற சு.கவின் உறுப்பினர்களை நீக்க முடிவு?

கட்சியின் தீர்மானத்துக்கு மதிபளிக்காமல் இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்ற மற்றும் அமைச்சுப் பதவி பெறுவதற்குத் தயாராக உள்ள 5 நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்குவதற்கு கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, லசந்த அழகியவன்ன, ஜகத் புஸ்பகுமார, சாமர சம்பத் தசநாயக்க ஆகிய 4 பேர் இராஜாங்க அமைச்சர் பதவிகளை பெற்றுள்ளனர்.

மேலும், அமைச்சரவை அமைச்சர் பதவிக்காக துமிந்த திஸாநாயக்க காத்திருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையிலேயே ஐவரையும் கட்சியில் இருந்து நீக்குவதற்கு கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

# எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு அஞ்சலிசெலுத்தி தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிடவும்!

## ஜனாதிபதி அறிவிப்பு



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரித்தானியாவின் அரச குடும்பத்தினருக்கும் மக்களுக்கும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியப் பேரரசில் அதிக காலம் மகுடத்தை வைத்திருந்த இரண்டாம் எலிசபெத் மகாராணி தனது 96 வயதில் காலமானார் என பக்கிங் ஹாம் அரண்மனை நேற்று அறிவித்தது.

மறைந்த ராணி எலிசபெத்தின் உடல் நாளை லண்டனுக்கு கொண்டு வரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெதர்லாந்து — நியூஸிலாந்து விதித்திருந்த இலங்கைக்கான பயணக்கட்டுப்பாடு நீக்கம்!

நெதர்லாந்து மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகள் இலங்கைக்கு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன.

இதனால், 11 நாடுகள் இலங்கைக்கான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன.

கிரேட் பிரிட்டன், சுவிற்ஸர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, டென்மார்க், நோர்வே, சுவீடன், கனடா மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகள் இலங்கைக்கு விதித்திருந்த பயணக் கட்டுப்பாடுகளை முன்னதாக தளர்த்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# விசுவமடு - கல்லாறு பகுதியில் 'அமுதம்' கல்விக்கூடம் திறப்பு!

## சுவிஸ் இறொயின்தாள் தமிழ்மன்றத்தின் நிதிபங்களிப்பில்

விசுவமடு கல்லாறு பகுதியில் மிகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாண வர்களின் கல்வி தரத்தை மேம்படுத்தும் வித மாக சுவிஸ்நாட்டில்இயங்கும்இறொயின் தாள் தமிழ்மன்றத்தின் நிதி பங்களிப்பில்

'ஏர் நிலம்' ஊடாக 4 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க கல் விக்கூடம் ஒன்றை அமைத்து சமூக மட்ட நலன்விரும்பிகள் மற்றும் கிராமமக்கள், மாணவர்கள் சகிதம் 'அமுதம்' கல்விக்கூடம் திறந்து வைக்கப்பட்டது,

இந்நிகழ்வு விருந்தினர் வரவேற்புடன் பெயர்பலகை திரை நீக்கம் செய்து அதனை தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் வரவேற்பு நடனம் இடம்பெற வரவேற்பு உரையுடன் ஆரம்பமாகியது. வரவேற்பு உரையை கிராம அபி விருத்தி சங்க தலைவர் நிகழ்த்த ஏர்நில செயற்பாட்டார் திருமதி வதனாவின் தலைமையுரையுடன் ஆதி பராசக்தி அறக்கட்டளை தலைவர் திருமதி கலைவாணி, பாடசாலை அதிபர், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் என ஏனையோரின் உரை களுடன் தொடர்ந்து அனைவருக்குமான மதிய உணவுடன் இந்த நிகழ்வு இனிதே நிறைவேறியது,

# தேசபந்து தென்னகோன் மீதான தாக்குதல்: சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல் நீடிப்பு!



மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அவர்களை கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் ஆஜர் படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி, சந்தேகநபர்களை எதிர் வரும் 15ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# இங்கிலாந்தின் புதிய மன்னராக இளவரசர் சார்லஸ் அரியணைக்கு



லண்டன்,செப்.09

இளவரசர் 3 ஆம் சார்லஸ் இங்கிலாந்தின் புதிய ராஜாவாக அறிவிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து ராணி 2ஆம் எலிசபெத் தனது 96 ஆவது வயதில் நேற்று உயிரிழந்தார். ஸ்காட்லாந்தில் உள்ள பால்மொரல் பண்ணை வீட்டில் ராணி 2 ஆம் எலிசபெத் உயிரிழந்தார் என பக்கிங்காம் அரண்மனை தெரிவித்துள்ளது. இந்நிலையில், இங்கிலாந்தின் புதிய ராஜாவாக இளவரசர் 3 ஆம் சார்லஸ் அரியணை ஏறியுள்ளார். சார்லஸ் பிலிப் அர்துர் ஜார்ஜ் என்ற இயற்பெயர் கொண்ட 3 ஆம் சார்லஸ் உயிரிழந்த 2ஆம் எலிசபெத்தின் மூத்த மகன் ஆவார்.

73 வயதான சார்லஸ் இங்கிலாந்தின் புதிய ராஜாவாக அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் அரியணை ஏறும் விழா விரைவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் தனது முதல் மனைவியான இளவரசி டயானாவை 1996ஆம் ஆண்டில் விவகரத்து செய்தார். இதனை தொடர்ந்து டயானா 1997 இல் சாலை விபத்தில் உயிரிழந்தார். அவரது மரணத்தில் தற்போதும் மர்மம் நீடித்து வருகிறது. இதனை தொடர்ந்து 2005ஆம் ஆண்டு கமிலா என்பவரை சார்லஸ் 2 ஆவது திருமணம் செய்துகொண்டார். இங்கிலாந்தின் புதிய ராஜாவாக சார்லஸ் அரியணை ஏற உள்ள நிலையில் ராணியாக கமிலா அரியணை ஏறுகிறார். பிரிட்டன் ஆட்சி காலத்தில் இந்தியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்ட கோகினூர் வைரத்தால் செய்யப்பட்ட கீரிடம் இனி கமிலா வசம் செல்ல உள்ளது.

## ராணியின் உடல் 5 நாள்கள் பொதுமக்களின் அஞ்சலிக்கு

### நல்லடக்கம் பத்து நாள்களின் பின்னர்

லண்டன்,செப்.09

நேற்று மரணமான இங்கிலாந்து மகாராணி எலிசபெத்தின் உடல் ஐந்து நாள்கள் பொதுமக்கள் அஞ்சலிக்காக லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் அரங்கில் வைக்கப்படவுள்ளது.

இங்கிலாந்து மகாராணி எலிசபெத் மறைவுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், ராணி எலிசபெத்தின் உடல் நல்லடக்கம் 10 நாள்களுக்குப் பின் நடைபெறும் எனவும், 5 நாள்கள் பொதுமக்கள் அஞ்சலிக்காக லண்டன் வெஸ்ட் மினிஸ்டர் அரங்கில் ராணி எலிசபெத்தின் உடல் வைக்கப்படவுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

உலகின் நீண்ட காலம் ஆட்சி செய்த 2 ஆவது நபர் என்ற பெருமைக்குரியவர் ராணி 2ஆம் எலிசபெத் ஆவார்.

ராணி எலிசபெத் மறைவுச் செய்தி அறிந்ததும் இங்கிலாந்து மக்களும், உலக தலைவர்களும் அதிர்ச்சி அடைந்தனர். ராணியின் உடல் பக்கிங்காம் அரண்மனைக்கு கொண்டு வரப்படுகிறது. ராணியின் உடலுக்கு அஞ்சலி செலுத்த கொட்டும் மழையிலும் ஏராளமான மக்கள் பக்கிங்காம் அரண்மனை முன் திரண்டுள்ளனர்.



## வியட்நாமில் பாரில் தீ! 32 பேர் உயிரிழந்தனர்





வியட்நாமின், ஹோசிமின் நகரில் உள்ள மதுபான பாரில் சுமார் 150 பேர் கூடியிருந்தனர். அப்போது அக்கட்டடத்தில் 2வது மாடியில் திடீரென்று தீப்பிடித்தது. தீ வேகமாக பரவியதால் அங்கிருந்தவர்கள் வெளியே ஓடி வர முயற்சித்தனர். ஆனால் தீ மற்றும் புகைமூட்டத்தில் பலர் சிக்கி கொண்டனர். இதனால் கட்டடத்தின் பால்கனியில் இருந்து பலர் கீழே குதித்தனர். தகவலறிந்ததும் தீயணைப்பு வீரர்களின் மீட்புக்குழுவினர் அங்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். தீயை பல மணி நேரம் போராடி அணைத்தனர். இந்த தீவிபத்தில் 15 பெண்கள் உள்பட 32 பேர் உயிரிழந்தனர். இதில் 8 பேர் கழிவறையில் பிணமாகக் கிடந்தனர். காயம் அடைந்தவர்களை மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இதில் 12 பேரின் நிலைமை கவலைகிடமாக உள்ளது. மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பாக். வெள்ளப் பாதிப்புகளை ஐ.நா. செயலர் நேரில் ஆய்வு

கனமழை, வெள்ள பாதிப்புகளை நேரில் பார்வையிட ஐ.நா. பொதுச்செயலாளர் பாகிஸ்தான் சென்றுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டில் கடந்த ஜூலை தொடங்கிய பருவமழை தீவிரமடைந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாகக் கனமழை கொட்டித்தீர்த்தது. இதன் காரணமாக நாட்டில் பல்வேறு நகரங்களை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு தண்ணீரில் மூழ்கியுள்ளதாக பாகிஸ்தான் பருவநிலை மாற்ற மந்திரி தெரிவித்தார்.

கனமழையின் தாக்கம் தற்போது வெகுவாக குறைந்து வரும் நிலையில் மீட்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் பெய்த கனமழை, வெள்ளம் அது தொடர்பான இயற்கை பேரிடர்களில் சிக்கி இதுவரை 1,391 பேர் உயிரிழந்துள்ளனர். வெள்ளம், கனமழை காரணமாக நாடு முழுவதும் 3.3 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 16.88 லட்சம் வீடுகள் அழிந்துள்ளன அல்லது சேதமடைந்துள்ளன என அந்நாட்டு தேசிய பேரிடம் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், கனமழை, வெள்ளத்தால் நிலைகுலைந்துள்ள பாகிஸ்தானுக்கு ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் சென்றுள்ளார். அவர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்க உள்ளார். அதேபோல், உலக நாடுகள் பாகிஸ்தானுக்கு உதவ வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தினசரி 20 முதல் 25 கிலோ மீற்றர் யாத்திரையில் நடக்கிறார் ராகுல்!





நாகர்கோவில்,செப்.08

ஸ்காட்கிறிஸ்டியன் கல்லூரியில் இருந்து இன்று 3 ஆவது நாள் 'பாரத் ஜோடோ' பாத யாத்திரையை புறப்பட்டார் ராகுல் எம்.பி.

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை காங்கிரஸ் எம்.பி. ராகுல் மேற்கொண்டுள்ள 'பாரத் ஜோடோ யாத்ரா'(இந்திய ஒற்றுமை பயணம்) என்ற நடை பயணத்தின் இரண்டாம் நாளான நேற்று (செப்.8) மாலை அவர் நாகர்கோவில் வந்தார்.

இன்று நாகர்கோவில், சுக்கான் கடை, வில்லுக்குறி, புலியூர்குறிச்சி, மேட்டுக்கடை வழியாக தக்கலை வரை நடைபயணம் மேற்கொள்கிறார்.

நாள் ஒன்றுக்கு 20 முதல் 25 கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து செல்ல அவர் திட்டமிட்டுள்ளார்.

இன்று காலை 11 மணிக்குள் முத்தடிச்சான்பாறை சென்று அங்கு ஓய்வு எடுக்கிறார். தொடர்ந்து அவர் மாலை 4 மணிக்கு பயணத்தை துவக்கி தக்கலை, மணலி வழியாக அழகிய மண்டபம் சென்று மிளகுமூட்டில் தங்குகிறார். ராகுலுடன் ஓர்அம்புலன்ஸ் மட்டுமே செல்கிறது. வேறு ஏதும் அவசரத்திற்கு ஹெலிக்கொப்டர் ஏற்பாடு செய்யப்படவில்லை.

அவருடன் பயணம் முழுவதும் செல்ல 120 தொண்டர்கள் இருப்பர். இவர்கள் தங்குவதற்கு 'கரவன்' வாகனங்கள் உடன் செல்கின்றன. மொத்தம் 60 கரவன்களில் தலா 2 பேர் வீதம் தங்குவர். ஒரே இடத்தில் விடுதிகள் கிடைப்பது அரிது என்பதால் கரவன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



## வீட்டிற்குள் புகுந்து திருடனை 'சிறை'ப் பிடித்து வைத்த நாய்!

பல்லடம் அருகே, வீட்டில் புகுந்து திருட முயன்ற வாலிபரை, வீட்டு உரிமையாளரின் வளர்ப்பு நாய் இரண்டு மணி நேரம் 'சிறை' பிடித்து வைத்தது.

திருப்பூர் மாவட்டம், பல்லடம், வடுகபாளையம் புதூர் ஸ்ரீனிவாசா நகரை சேர்ந்தவர் கோபால் (வயது 52), விவசாயி.

நேற்று அதிகாலை, வாலிபர் ஒருவர், இவரது வீட்டு கொம்பவுண்ட் சுவரைத் தாண்டி குதித்து திருட முயன்றார். இதைப்பார்த்த நாய், வாலிபர் மேல் ஆக்ரோத்துடன் பாய்ந்தது. சப்தநாடியும் ஒடுங்கிப்போன அந்த வாலிபர், பயத்தில் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்தார். அவரை நகர விடாமல் நாயும் அதே இடத்தில் உட்கார்ந்து அவரைப் பார்த்த படி இருந்தது.

இப்படியே, இரண்டு மணி நேரம் ஆடாமல் அசையாமல் வாலிபர் உட்கார்ந்திருக்க, நாயும் அவரை பார்த்தபடியே இருந்தது.நேற்று காலை, 6 00 மணிக்கு வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்த கோபால், நடந்ததை அறிந்து, பொலிஸாரிடம் அந்த நபரை ஒப்படைத்தார்.


பல்லடம் பொலிஸார் கூறுகையில், 'அந்த வாலிபர் வட மாநிலத்தைச் சேர்ந்தவர். பெயர் விவரம் தெரியவில்லை. நாயிடம் சிக்கிக் கடிபட்டதால் காயங்களுடன் மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தோம்' – என்றனர்

## வேலூர் சிறையில் முருகன் உண்ணாவிரதப் போராட்டம்

வேலூர்,செப்.09

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முருகன் கடந்த 32 ஆண்டுகளுக்கு மேலாக சிறை தண்டனை அனுபவித்து வருகிறார். இதே வழக்கில் கைது செய்யப்பட்ட முருகனின் மனைவி நளினிக்கு பரோல் வழங்கப்பட்டு அவர் உறவினர் வீட்டில் தங்கியுள்ளார்.

வேலூர் சிறையில் முருகன் நேற்று உணவு சாப்பிட மறுத்தார். மேலும் உண்ணாவிரதம் இருக்கப் போகிறார் என சிறை அதிகாரிகளிடம் தெரிவித்தார். வேலூர் சிறை காவலர் ஒருவரை அவதூறுவதாகப் பேசியமைக்காக பாகாயம் பொலிஸ் நிலையத்தில் முருகன் மீது வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கை விரைந்து முடிக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார். இன்று காலையில் முருகன் ஜெயில் உணவு சாப்பிடவில்லை. 2 ஆவது நாளாக அவர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.







## நேதாஜியின் 28 அடி உயர சிலை இந்தியா கேட் பகுதியில் திறப்பு

'நேதாஜி' என்று இந்திய மக்களால் அழைக்கப்படுபவர் சுபாஷ் சந்திர போஸ். இந்திய சுதந்திர போராட்டத் தலைவர்களுள் ஒருவரான இவரின் 125 ஆவது பிறந்தநாள் தினத்தையொட்டி கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி டெல்லியில் உள்ள இந்தியா கேட் பகுதியில் நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் மின் ஒளி வடிவிலான சிலையை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். மேலும் நேதாஜி சுபாஷ் சந்திர போஸிற்கு அதே இடத்தில் பிரம்மாண்ட சிலை அமைக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் 28 அடி உயரமுள்ள நேதாஜி சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சிலையை பிரதமர் மோடி தற்போது திறந்து வைத்திருக்கிறார்.

செப்டம்பர் 9 முதல் 11ம் தேதி வரை வரை இரவு 8.00 மணிக்கு நேதாஜியின் வாழ்க்கை குறித்த ட்ரோன் கண்காட்சி இந்தியா கேட் பகுதியில் காண்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைப் பார்வையாளர்கள் இலவசமாக கண்டுகளிக் கலாம் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

28 அடி உயரம் கொண்ட இந்த சிலை 280 மெட்ரிக் டன் எடை அளவில் மோனோலித்திக் கிரானைட் என்ற கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது. 26ஆயிரம் மணிநேரம் கடின உழைப்புக்குப்பின் உருவாக்கப்பட் இந்த சிலை முற்றிலும் கைகளால் செதுக்கப்பட்டவை தெலங்கானா மாநிலம் கம்மம் நகரிலிருந்து கறுப் கிரானைட் கல் டெல்லிக்கு கொண்டுவரப்படுவதற்கா 140 சக்கரங்கள் கொண்ட டிரக் பயன்படுத்தப்பட்டிரு கிறது. மைசூருவைச் சேர்ந்த சிற்பி அருண் யோகிரா தலைமையிலான குழுவினர், பாரம்பரிய நுட்பங்க மற்றும் நவீன கருவிகளைப் பயன்படுத்தி கையா இந்தச் சிலையை வடிவமைத்துள்ளனர். இந்தியாவி உள்ள உயரமான சிலைகளில் தற்போது இதுவு ஒன்று.





# பொலிஸ் நிலைய புதிய கட்டடம் தம்பலகாமத்தில் திறந்து வைப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம்,தம்பலகாமம் பொலிஸ் நிலையத்துக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நிரந்தரக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை கண்டி பிரதான வீதியின் தம்பலகாமம் சந்தியை அண்மித்த பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டது. சுமார் ஆறு கோடிநாற்பது லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக் கட்டடத்தை கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ராஜித ஸ்ரீ டமிந்த பிரதம அதிதியாக கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். பல வருட காலமாக தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் தற்காலிகமாக பொலிஸ் நிலையம் இயங்கி வந்த நிலையில் புதியகட்டடநிர்மாணத்தின்பின்மக்களுக்குசேவையாற்றும் நோக்கில் இந்த வசதி அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப்பொலிஸ்திணைக்களத்தின் 156 ஆவது வருடதினத்தைச்சிறப்பிக்கும்முகமாகவும்தம்பலகாம பொலிஸ் நிலையம் பல திட்டங்களை நடை முறைப் படுத்தியுள்ளது. இந்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதே செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, தம்பலகாமம் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி சம்பத் பண்டார, பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக்க பண்டார , பொலிஸ் உயரதிகாரிகள், உள்ளூர் அரசியல்வாதிகள், திணைக் கள, வங்கி அதிகாரிகள் , சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச எழுத்தறிவு தினத்தை ஒட்டி திருமலையில் விழிப்புணர்வுப் பேரணி









இன்றைய நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளத்தக்க வகையில் நிலைபேறான கல்வி அபிவிருத்தியை நோக்கிய மாணவர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு நாளை சனிக்கிழமை வரும் சர்வதேச எழுத்தறிவு நாளை முன்னிட்டு நேற்று திருகோணமலை கல்வி வலய முறைசாராப் பிரிவின் ஏற்பாட்டில் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் தலைமையில் இந்தப் பேரணி நடைபெற்றது.

இவ் விழிப்புணர்வுப் பேரணியில் திருகோணமலையின் மாதுமை அம்பாள் வித்தியாலயம், செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம் மற்றும்பாரதி தமிழ் வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் அடங்கலாக ஊர்வலமும், ஒன்று கூடலும் நடைபெற்றன. வலயக் கல்விப் பணிப்பாளரது அறிவுறுத்தலுக்கு அமைவாக ஏனைய பாடசாலைகள் தத்தமது பகுதிகளில் இந்த விழிப்புணர்வுப் பேரணியை நடத்தியிருந்தன. எழுத்தறிவின் அவசியத்தை வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப் பட்டிருந்தது.

இந்நிகழ்வுகளில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் போக்குவரத்துக்கு இடையூறான வியாபார நிலையங்கள் தொடர்பில் நடவடிக்கை

கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் சட்டவிரோத வியாபாரத் தளங்களை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் விடுத்துள்ள பணிப்புரைக்கமைவாக, மாநகர சபையின் வருமான பரிசோதகர்கள் நேற்று முன்தினம் முதல் இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதான வீதிகளிலும் உள்ளூர் வீதிகளிலும் சட்டவிரோதமாக பலகை, மேசை மற்றும் கொட்டகை அமைத்து மீன், மரக்கறி, பழ வகைகள், இளநீர் மற்றும் இதர பொருள்களின் வியாபார நடவடிக்கைகளால் வாகனப் போக்குவரத்துகளுக்கும் பாதசாரிகளுக்கும் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டு வருவது தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்தே, இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆகையால், சம்மந்தப்பட்டவர்கள், இச்சட்டவிரோத அங்காடிகளில் இருந்து உடனடியாக தவிர்ந்துக் கொள்வதுடன், தமது வியாபாரத் தளங்களை அகற்றிச் செல்ல வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வறிவுறுத்தலை மீறி வியாபாரத்தில் ஈடுபடுவோரின் தளபாடங்கள் மற்றும் பொருட்கள் கையகப்படுத்தப்படும் என்பதுடன், சம்மந்தப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வீதியோரங்களிலும் நடைபாதைகளிலும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கடைகளின் பெயர்கள் தாங்கிய விளம்பரப் பலகைகளும் பொருள்களும் காட்சிப்படுத்தப்படுவதால் பாத சாரிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகரித்துக் காணப் படுகின்றன. ஆகையினால் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான பணிப் புரை விடுக்கப்பட்டிருப்பதாக மாநகர மேயர் றகீப் தெரிவித்தார்.

# வாழைச்சேனையில் வீடுடைத்து 40 பவுண் நகை, பணம் திருட்டு

மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள யுனியன் கொலனி பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் ஜன்னலை உடைத்து, அங்கிருந்த 40 பவுண் தங்க நகைகள் மற்றும் 65 ஆயிரம் ரூபா பணம் என்பன நேற்று அதிகாலை சூறையாடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டில் தாயும் மகனும் நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் ஆழ்ந்த நித்திரையில் இருந்துள்ளனர்.

காலையில் எழுந்திருந்தபோது, வீட்டின் ஜன்னல் கிறிலை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், அங்கு டை ஒன்றில் வைத்திருந்த 40 தங்க நகைகள் மற்றும் 65 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டமையை அடுத்து, வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாடு மிகவும் நெருக்கடி நிலைமையில் இராஜாங்க அமைச்சர்கள் எதற்காக?

## ஜனாதிபதியிடம் சுமந்திரன் காட்டத்துடன் கேள்வி



நாடு நெருக்கடியில் இருக்கும் வேளையில் இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதன் நியாயம் என்ன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் 37 இராஜாங்க அமைச்சர்கள் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ள அவர், 37 இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் மக்கள் மற்றும் அவர்களின் போராட்டங்கள் மீதான அரசாங்கத்தின் உணர்வற்ற தன்மையையே காட்டுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். சிலர் தினசரி உணவை இரண்டாகக் குறைத்துள்ளதை சுட்டிக்காட்டிய அவர், வீதியில் பிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வங்கிக்கு வெளியேயும் வாடிக்கையாளர்கள் வெளியே வரும்போது அவர்களிடம் பிச்சை எடுப்பதற்காக குழந்தைகளுடன் மக்கள் காத்திருக்கிறார்கள், அதுதான் நிலைமை என்றும் நீங்கள் சென்று இராஜாங்க அமைச்சர்களை நியமித்துக் கொள்ளுங்கள் என்றும் அவர் விசனித்துள்ளார்.

# மீண்டும் நிச்சயமற்றநிலைமை நாட்டில் ஏற்படும் சாத்தியம்!

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன எச்சரிக்கை



தற்போதைய ஒப்பந்த நடைமுறைக்கு அமைவாக நிலக்கரியை இறக்குமதி செய்ய முடியாத பட்சத்தில் நாட்டில் மீண்டும் நிச்சயமற்ற நிலை ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நேற்று(வியாழக்கிழமை) உரையாற்றிய போதே மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைவரத்தைக் கருத்தில் கொண்டு ஒப்பந்த முறையின் மூலம் நிலக்கரியை வழங்குவதற்கு இணங்கிய நிறுவனம் அதற்கு முன்வரத் தயங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

# இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவிற்கு எதிரான மனு 13ஆம் திகதி விசாரணைக்கு!



நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிாந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை எதிர்வரும் 13 ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (வியாழக்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறி அவருக்கு எதிராக இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிாந்த நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிரபல நடிகை தமிதா கைது சஜித் – நாமல் சொற்போர்!





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் கடும் சொற்போர் இடம்பெற்றது.

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற போராட்டத்தின் போது ஜனாதிபதி செயலகத்துக்குள் பலவந்தமாக பிரவேசித்த குற்றச்சாட்டில் நடிகை தமிதா அபேரத்ன கைது செய்யப்பட்டமை மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

அப்பாவி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்படும் அடக்குமுறையை நிறுத்துமாறும் நடிகை தமிதா அபேரத்னவை தடுத்து வைப்பதைத் தவிர்க்குமாறும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் இவ்வாறான அடக்குமுறைகள் தொடரும்போது அனைத்து அரசியல் கட்சிகளும் எவ்வாறு முன் வந்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் என்றும் அவர் மேலும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதனையடுத்து, எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதிலளித்த ஸ்ரீஜலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நாட்டின் தற்போதைய சட்டங்களின்படி குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளுக்கு இணங்கி ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதையடுத்து, நாமல் ராஜபக்ஷவுக்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர், பொதுமக்களின் பிரதிநிதித்துவத்தை ராஜபக்ஷ குடும்பமோ அல்லது நாமல் ராஜபக்ஷவோ தீர்மானிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

# கல்லடி கிருஷ்ணர் ஆலயத்தில் சிறப்புற மகா கும்பாபிஷேகம்







(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு கல்லடி அருள்மிகு பாமா – ருக்மணி சமேத ஸ்ரீ கிருஷ்ண சுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் நேற்று பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடை சூழ, வேதவிற்பன்னர்கள் வேதபாராயணங்கள் இசைக்க, மேள வாத்தியங்கள் முழங்க, வெகு சிறப்பாக நடந்தேறியது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகப் பூசைகள் இடம்பெற்று, ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லடி மாரியம்மன் ஆலயத்திலிருந்து பாற்குடப் பவனி இடம்பெற்று சங்காபிகேஷம் நிகழ்த்தப்படவுள்ளது. கும்பாபிகேஷக் கிரியைகள் யாவும் நயினை பிரதிஷ்டா பூணம் சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களாலும், இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் வேதாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தானு மகாதேவ குருக்களாலும் உரிய விதிப்படி செய்யப்பட்டன.

இதேவேளை நேற்று முன்தினம் பாமா, ருக்மணி சமேத கிருஷ்ணருக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளான சனீஸ்வரர், ஆஞ்சநேயருக்கும் எண்ணெய்க் காப்பு சாத்தப்பட்டு,கிரியைகள் இடம்பெற்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.09.2022இல் வெளியிடப்பெற்றது.